கொளத்தூர் பகுதியில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்!

# புது வலிமையைப் பெற்றேன் இன்று!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக.7-

**உடல்நிலை காரணமாகத் தள்ளிப்போன கொளத்தூர் பயணம், நெடுநாள் பிரிந்திருந்த உணர்வைத் தந்தது. அந்த உணர்வு நீங்கி, இன்று புது வலிமையைப் பெற்றேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

கொளத்தூர் பகுதியில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

உடல்நிலை காரணமாகத் தள்ளிப்போன கொளத்தூர் பயணம், நெடுநாள் பிரிந்திருந்த உணர்வைத் தந்தது. அந்த உணர்வு நீங்கி, புது வலிமையைப் பெற்றேன் இன்று!

இன்றைய கொளத்தூர் நிகழ்ச்சியில்,

- கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில், ரூ.18.26 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம்,
- பெரம்பூர், மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.9.74 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைத்து,
- கொளத்தூரில் புதிய காவல் துணை ஆணையர் அலுவலகம்,
- பெரவள்ளூர் காவல் நிலையம், சட்டம் ஒழுங்குப் பிரிவு, போக்குவரத்துக் காவல் பிரிவு, சைபர் குற்றப்பிரிவுக் கட்டடம்,
- ரெட்டேரியில் AC பேருந்து நிறுத்தம் என, ரூ.17.65 கோடி மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினேன்!


நலம் விசாரித்து அன்பைப் பொழிந்த அனைவருக்கும் நன்றி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்திடம் உண்மையைப் பேசும் நெஞ்சுரத்தை வெளிப்படுத்தியவர்!

# ஜம்மு-காஷ்மீர் மாநில முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஆக.7-

ஜம்மு-காஷ்மீர் மாநில முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

சத்யபால் மாலிக் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

அமைப்பின் படிநிலைகளினூடே உயர் பொறுப்புகளை வகிக்கும் நிலைக்கு உயர்ந்தாலும், அதிகாரத்திடம் உண்மையைப் பேசும் நெஞ்சுரத்தை அவர் வெளிப்படுத்தினார். வகித்த பொறுப்பில் இருந்து அவர் ஓய்வுபெற்றபோதிலும், அவரது மனச்சான்று உறங்கிடவில்லை.

அவர் வகித்த பொறுப்புகளால் மட்டுமல்ல, அவர் எடுத்த நிலைப்பாடுகளாலும் சத்ய பால் மாலிக் அவர்கள் வரலாற்றில் நினைவுகூரப்படுவார்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.


கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று

# முத்தமிழறிஞர் கலைஞரின் 7வது நினைவு நாள் - அமைதிப் பேரணி!

## ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர்கள் வேண்டுகோள்!

சென்னை, ஆக. 7 -

‘முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளையொட்டி இன்று (ஆகஸ்ட் 7) காலை 7 மணியளவில் கழகத் தலைவர் - தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைதிப் பேரணி சென்னை - அண்ணாசாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் இருந்து புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார். இதில் ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்றிடுமாறு சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



இது குறித்து சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தகைமைசால் தலைவராக, எழுத்தாளராக , கவிஞராக, சொற்பொழிவாளராக, திரைக்கதை வசனகர்த் தாவாக - இலக்கியவாதியாக திரைப்படத் தயாரிப்பாளராக, தலைசிறந்த நிர்வாகியாக, தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் “அமைதிப் பேரணி”, இன்று (ஆகஸ்ட்7, வியாழக்கிழமை) காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர்.

இதில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர் அணி, மாற்றுத் திறனாளிகள் அணி ஆகிய அனைத்து அணியினரும் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாஷ்மினா சால்வைகளை தயாரிப்பதை நோக்கமாகக் கொண்ட

# கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் மீதான ஜி.எஸ்.டி.யை குறைக்க அரசு முன்மொழிகிறதா?

## மக்களவையில் – முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!



*புதுடெல்லி, ஆக.7-*

*பாஷ்மினா சால்வைகளை தயாரிப்பதை நோக்கமாகக் கொண்ட கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் மீதான ஜி.எஸ்.டி.யை குறைக்க அரசு முன்மொழிகிறதா மற்றும் இந்திய சந்தையில் வாங்குபவர்களுக்கு பட்டு கம்பளங்கள் மிகவும் மலிவு, அப்படியானால், அதன் விவரங்கள், இது சம்பந்தமாக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படும் முடிவு, ஏழை மக்கள் மற்றும் விவசாயிகளின் நலனுக்காக 25 கிலோ வரை பேக்கேஜ் செய்யப்பட்ட அரிசி மற்றும் தவிடு மீது விதிக்கப்பட்டுள்ள 5 சதவீத ஜிஎஸ்டியை ரத்து செய்ய அரசு இதே போன்ற நடவடிக்கைகளை எடுக்குமா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன என்று மக்களவையில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பினார்.*

*நிதியமைச்சர் ஸ்ரீமதி நிர்மலா சீதாராமன் அளித்த பதில் வருமாறு :*

*மாநிலங்கள் யூனியன் பிரதேசங்கள் மற்றும் மையத்தின் உறுப்பினர்களை உள்ளடக்கிய அரசியலமைப்பு அமைப்பான ஜி.எஸ்.டி. கவுன்சிலின் பரிந்துரைகளின்படி ஜிஎஸ்டி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. செப்டம்பர் 17, 2021 அன்று நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் அதன் 45வது கூட்டத்தில், ஜிஎஸ்டி விகிதத்தை பகுத்தறிவு செய்வது தொடர்பாக அமைச்சர்கள் குழுவை (ஜிஓஎம்) அமைத்துள்ளது. GOM இன் குறிப்பு விதிமுறை களில் GSTயின் தற்போதைய விகித அடுக்கு கட்டமைப்பின் மதிப்பாய்வு மற்றும் பகுத்தறிவு நடவடிக்கைகளை பரிந்துரைப்பது ஆகியவை அடங்கும்.*

*இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 279A பிரிவின்படி, GST கவுன்சில் GST விகிதங்களை சரக்குகள் மற்றும் சேவைகளின் விநியோகத்தில் பயன்படுத்த பரிந்துரைக்கிறது மற்றும் GST கவுன்சிலின் அத்தகைய பரிந்துரைகளை மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் செயல்படுத்துகின்றன.*

*ஜிஎஸ்டி கவுன்சிலின் பரிந்துரைகளின்படி ஜிஎஸ்டி விகிதங்கள் நிர்ணயிக்கப் படுகின்றன, இது மாநிலங்கள் யூனியன் பிரதேசங்கள் மற்றும் மையத்தின் உறுப்பினர்களை உள்ளடக்கிய அரசியலமைப்பு அமைப்பாகும். செப்டம்பர் 17, 2021 அன்று நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் அதன் 45வது கூட்டத்தில், ஜிஎஸ்டி விகிதத்தை பகுத்தறிவு செய்வது தொடர்பாக அமைச்சர்கள் குழுவை (ஜிஓஎம்) அமைத்துள்ளது. GoM இன் குறிப்பு விதிமுறைகளில் GSTயின் தற்போதைய விகித அடுக்கு கட்டமைப்பின் மதிப்பாய்வு மற்றும் பகுத்தறிவு நடவடிக்கைகளை பரிந்துரைப்பது ஆகியவை அடங்கும் என்று கூறினார்.*

கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வி.செந்தில்பாலாஜி தலைமையில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு மாபெரும் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை!



*கோவை, ஆக. 7-*

*கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று (7-ம் தேதி) கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் குனியமுத்தூர், முத்துச்சாமி திருமண மண்டபத்தில் இருந்து அமைதி பேரணியாக சென்று குனியமுத்தூர் பேருந்து நிலையம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது இதில் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டுமென கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*அதன் விபரம் வருமாறு:*

*தமிழே உயிராக, தமிழர் வாழ்வே மூச்சாக, தமிழ் நாட்டின் உயர்வே வாழ்வாகக் கொண்டு வாழ்ந்த தமிழினத் தலைவர், செம்மொழி காவலர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கலைஞரின் நினைவை போற்றி கழகத்தின் வெற்றிக்கு உறுதியேற்போம் என இன்று (7-ம் தேதி) அமைதிப் பேரணியாக சென்று முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு தினத்தை நினைவு கூற வேண்டும் என கழகத் தலைவர், முதலமைச்சர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார், அவர்களின் ஆணைக்கிணங்க கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (7-ம் தேதி வியா ழக்கிழமை) காலை 8.00 மணிக்கு கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகிய எனது முன்னிலையில் குனியமுத்தூர் திருமண மண்டபத்தில் இருந்து அமைதி பேரணியாக சென்று குனியமுத்தூர் பேருந்து நிலையம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது.*

*இந்த மாபெரும் அமைதிப் பேரணியில் வடக்கு மாவட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடி கள், கழக செயல் வீரர்கள் என பெரும் திரளாக அனைவரும் பங்கேற்று அமைதிப் பேரணியை சிறப்பு செய்து முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவை போற்றிட வேண்டுமென கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலப்பாக்கம் கு.சண்முகம்

### ஆகஸ்ட் 7 (2023)



**1975ஆம் ஆண்டு ஆலப்பாக்கம் கிளைக் கழக பிரதிநிதியாகவும் பின்னர், கிளைச் செயலாளர், மூன்று முறை வில்லிவாக்கம் ஒன்றியச் செயலாளர், மதுரவாயல் நகரச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு கழகப் பொறுப்புகள் வகித்து தனது பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**2006ல் மதுரவாயல் நகர்மன்றத் தலைவராகவும், 2022ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**சென்னை மாநகராட்சி சுகாதார நிலைக்குழு உறுப்பினராகவும், சென்னை துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.**

**2023ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளன்று நடைபெற்ற அமைதி பேரணியில் கலந்து கொண்ட வழியிலேயே திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பில் மறைவெய்தியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஹைவேவிஸ் எம். மனோகரன்

### ஆகஸ்ட் 7 (2017)



**இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**பத்து ஆண்டுகளுக்கு மேலாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த மலைப் பிரதேசமான ஹைவேவிஸ் பேரூர்க் கழகச் செயலாளராகவும் – இருபத்தெட்டு ஆண்டுகள் ஒன்றுபட்ட மதுரை மாவட்ட தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**